1989 மார்ச் 30] [திரு. பி. எச். பாண்டியன்]

ஊக்குவித்தால் யாருமே இங்கே வேறு எந்தப் பிரச்சினையையும் பேசமாட்டார்கள். இங்கே வேறு பிரச்சினையே வராது. ஆகவே, ஒழுங்காக மக்களுக்காக பேசக்கூடியவர்களுக்கு போனசாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்—உதாரணமாக சேரன்மா தேவியை எடுத்து, விடுபட்ட தெருக்களுக்கு உடனே குடிப்பதற்கு தண்ணீரை வழங்குவதற்கு இன்றைக்கே ஒரு கோடி ரூபாயாவது வழங்குங்கள். நாடு பாராட்டும், எல்லா உறுப்பினர்களும் நாளையிலிருந்து சுமுகமாக இங்கே அமர்ந்து பேசுவார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேரன்மாதேவியில் மட்டும் அல்ல, மாநிலம் முழுவதும் இருக்கின்ற வறட்சிப் பிரச்சினை குறித்து ஆராயவும், அதற்குரிய முடிவுகளை எடுக்கவும் வருகின்ற 15, 16 ஆகிய நாட்களில் மாவட்ட ஆட்சித் தலைவர்களுடைய கூட்டத்தைக் கூட்டி இருக்கிறேன். அப்போது நம்முடைய திரு. பாண்டியன் அவர்கள் சொன்னது எல்லாம் உண்மைதானா என்பதை ஆராய்ந்து ஏற்ற நடவடிக்கை எடுக்கப்படும்.

(ஊ) அவைக் குறிப்பிலிருந்து சில சொற்களை நீக்கக் கோருதல்.

திரு. கோ. பூவராகன்: மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, நேற்றையதினம் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பதிலுரை கூறும்போது கடைசியாக நான் ஒரு மிக, மிக சாதாரணமானவன், கேவலமானவன், சூத்திரன் என்பதாலே என்ற வார்த்தைகள் பத்திரிகையில் செய்தியாக வந்திருக்கிறது. தயவு செய்து தங்கள் மூலம் அந்த வார்த்தைகள் குறிப்பேட்டில் வந்து அச்சடிக்கப்பட்டு பிற்காலத்தில் எல்லோரும் படிக்கக்கூடிய ஒரு நிலை ஏற்பட்டுவிடக்கூடாது என்பதற்காக அதை நீக்கிவிட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொன்மைக் காலத்திலிருந்த புராணங்களிலேயே இருக்கிறது. எனவே, இங்கே இருப்பது தவறு இல்லை.

திரு. கோ. பூவராகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சூத்திரன் என்று இருப்பதை நான் மறுக்கவில்லை. சாதாரணமானவன், மிகவும் கேவலமானவன் என்ற வார்த்தைகளையாவது நீக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

(எ) பேரவை மரபுகளைக் கடைப்பிடித்தல் குறித்து.

திரு. சி. கோவிந்தராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே சட்டமன்ற விதிகள் இருக்கின்றன. இப்போது இங்கே மாண்புமிகு திரு. பாண்டியன் அவர்கள் மக்கள் குறைகளை எடுத்துப் பேசினார்கள். அதற்கு மாண்புமிகு

முதலமைச்சர் அவர்கள் கூட பதில் சொன்னார்கள். இங்கே மக்களுடைய பிரச்சினைகளைப் பேசுவதற்கு ஒரு நேரம் ஒதுக்கப் பட்டிருக்கிறது. ஒரு பட்ஜெட் விவாதம் இங்கே வைக்கப்பட்டி ருக்கிறது. இப்போது தான் நீங்கள் ஒரு உரிமைப் பிரச்சினைமீது பின்னால் தீர்ப்பு வழங்குவதாகக் கூறி அடுத்த நிகழ்ச்சிக்குப் போவ தற்கு முன்னதாக இப்படி அளவு கடந்த அதிகாரத்தைப் படைத்து ஒரு சபாநாயகராக இருந்த அவர் சட்டமன்ற விதிகளை முழுமை யாக நன்கு உணர்ந்தவர். இந்த நேரத்தை இப்போது பயன் படுத்துவதன் மூலமாக ஒரு முன் உதாரணத்தைக் கொண்டு வந் தால் அனைவரும் இந்த பிரச்சினையை எழுந்து பேசக்கூடிய ஒரு நிலைமை வரும். எனவே இப்படிப்பட்ட நிலைமைகளை எல்லாம் அனுமதிக்க வேண்டாம். நேற்றே கூட நான் கூறினேன். ஒத்தி வைப்புப் பிரேரணை கொடுத்த உடனே அவையை எதற்காக ஒத்திவைக்க வேண்டும் என்ற அந்தக் காரணத்தை மட்டும் 2 நிமிடங்களில் பேசிவிட்டுப் போவதற்கு பதிலாக அதில் அடக்கப் பட்டு இருக்கக்கூடிய விஷயங்களை எல்லாம் பேசுவதற்கு நீங்கள் அனுமதிக்கக்கூடாது என்று சொன்னேன். இப்படிப்பட்ட முறை யில் அனுமதிப்பது என்பது சபையை நல்லமுறையில் நடத்து வதற்கு உதவாது என்று கூறிக் கொள்கிறேன்.

திரு. பி. எச். பாண்டியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்களுடைய பிரச்சினைக்காக அவையின் விதியை மீறலாம். ஒரு தனி மனிதனுடைய பிரச்சினைக்காக அவையின் விதியை மீறக்கூடாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவிந்தராஜன் அவர்கள் சொன்னதை நான் கவனத்தில் கொள்வேன். எல்லா உறுப்பினர்களும் அருள்கூர்ந்து மரபை இன்னும் இறுக்கமாகப் பின்பற்றுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்த அலுவல், 1988-89-ஆம் ஆண்டிற்கான இறுதித் துணை நிதிநிலை அறிக்கை.

7. அறிவிப்புகள்.

(அ) கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கை, 1988-89 முன்மொழிதல் (ஆ. இ.).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 1988-89-ஆம் ஆண்டின் கூடுதல் மானியங்களுக்கான கோரிக்கை களைப் பேரவையில் முன்மொழிவது குறித்து ஆளுநர் அவர்களிட மிருந்து கீழ்க்கண்ட செய்தி வரப்பெற்றுள்ளது:

" In pursuance of Article 205, clause (2), read with Article 203, clause (3) of the Constitution of India, I, P. C. Alexander, Governor of Tamil Nadu hereby give my recommendation to the moving, in the Tamil Nadu Legislative Assembly, of the Demands for Further Grants for the year 1988-89. "